[திரு. தி. வேல்முருகன்] [2010 ஏப்ரல் 15

தொடர் வண்டித் துறை அமைச்சர் திரு. ஏ.கே. மூர்த்தி அவர்களும், சென்னை மண்டலக் குழுத் தலைவர் திரு. ஜெயராம் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தியும் இதுநாள்வரையில் உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. ஆனால், அவருடைய உறவினர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தபோது அரசியல் கட்சி ஒன்றின் பிரமுகர்கள் காவல் நிலையத்திற்குச் சென்று காவலர்களை மிரட்டி, விடுதலை செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். எங்கள் மாவட்டச் செயலாளரைக் கொலை செய்ய முயற்சித்த அந்த ரௌடிக் கும்பலைத் தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழோ அல்லது குண்டர் சட்டத்தின்கீழோ, உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்கு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர், அவை முன்னவர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உரிய நடவடிக்கைக்கு recommend செய்வோம். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, நீங்கள் கொடுத்திருக்கிற முன்னறிவிப்பை இப்போது எடுக்கப் போகிறேன். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பிரச்சினை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்களும் கொடுத்திருப்பதுதான் அது. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

(உ) வறட்சி, குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நிவாரண உதவி வழங்கக் கோருதல்

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை இது. தமிழ்நாட்டில் இப்போது கடுமையான வறட்சி நிலவுகிறது. (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கை குறித்து நான் பேசவில்லை. நான் சொல்லிவிடுகிறேன். கடுமையான வறட்சி நிலவுகிறது. அரசும் வறட்சியை ஒப்புக்கொண்டிருக்கிறது. வறட்சி நிலவுகிற மாவட்டங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக நிதி ஒதுக்கியதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன், வரவேற்கிறேன். அதேநேரத்தில், தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்கள், இன்றைக்கு

2010 ஏப்ரல் 15] [திரு. ஜி.கே. மணி]

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினாலே விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வேலைவாய்ப்பே இல்லை. வெளியூர்களுக்கு வேலை தேடிப் போகிறார்கள். விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டது. கிணற்றில் தண்ணீர் இல்லை. ஆகவே, இந்த உழவர்களின்—விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாட்டத்தைப் போக்குவதற்காக அரசு நிவாரண நிதி அளிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதம் ரூ.5,000 மற்றும் இதர நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில், கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவிக் கொண்டிருப்பது குறித்து நான் 56-வது விதிப்படி ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாங்கள் கொடுத்திருக்கிறபோது, நீங்கள், சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளை இந்த இடத்தில் பிரதிபலிப்பதற்கான ஒரு வாய்ப்பைத் தந்து, எங்களுடைய மாவட்டத்தில் எப்படிப்பட்ட கடுமையான பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் கேட்டறிந்த பின்னால், அது சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் நம்முடைய துணை முதல்வர் அவர்கள் கவனத்திற்குச் சென்றபிறகு அதற்கான பதில் கிடைத்திருக்குமேயானால், எங்களுக்குக் கிடைத்திருக்கிற நிதி அதிகமாக வந்திருக்கும் என்பதுதான் எங்களுடைய கணிப்பு. ஆனால், இன்று இந்த நிலைமையை உணர்ந்திருக்கக்கூடிய தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு, தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ரூ.2 கோடி கொடுத்திருக்கிறார்; நன்றி.

முற்பகல் 11-05

நாங்கள் கேட்பதோ 50 கோடி ரூபாய். ஏனென்றால் ஒரு ஆழ்த்துளைக் கிணறு போட்டால் 65,000 ரூபாய் ஆகிவிடுகிறது. நீங்கள் மொத்தமாகப் பார்த்தீர்கள் என்றால் 200 கிணறுகள் கூடப் போட முடியாது. நீங்கள் கொடுக்கிற இந்த ரூபாய், எங்கள் வேலூர் நகரத்திற்கே போதாது. மாவட்டம் முழுக்க மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 2 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதற்கு

[திரு. சி. ஞானசேகரன்] [2010 ஏப்ரல் 15

நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர், 25 கோடி ரூபாய் தேவையென்று அறிக்கை கொடுத்திருக்கிறார். அதுவும் போதாது என்று அவரிடம் நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்; எங்களுடைய அல்லாபுரம் பேரூராட்சியில் தண்ணீர் கொடுத்து 23 நாட்களாகிறது. அதேபோல காட்பாடி, அணைக்கட்டு தொகுதிகளில் எல்லாம் மக்கள் தண்ணீர் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்—கொடுத்து இருக்கிற 2 கோடி ரூபாய்க்கு நன்றி, நன்றி. ஆனால், இன்னும் 48 கோடி ரூபாயை ஒரு வார காலத்திற்குள் தாங்கள் கொடுத்து எங்கள் மாவட்டத்தினுடைய தாகத்தை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தீர்ப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

(ஊ) மானியக் கோரிக்கை விவாதத்தில் கட்சிகளுக்குப் போதிய நேரம் ஒதுக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவபுண்ணியம், நீங்கள் கொடுத்திருப்பதைத்தான் நான் எடுக்கப் போகிறேன். (குறுக்கீடு) அது இல்லையென்றால், இன்னும் எத்தனைதான் வைத்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை. எங்களுடைய நேரத்தைப் பற்றிய கருத்தை நான் இங்கே பதிவு செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாக உணர்கிறேன். Zero Hour-ல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் பேரவைத் தலைவருக்குத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அவர்களுடைய கவனத்திற்குத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பிறகு என் அறைக்கு வாருங்கள். நேரம் ஒதுக்குவது பற்றிப் பேசிக்கொள்ளலாம்.

திரு. வை. சிவபுண்ணியம்: இல்லை, இல்லை. நான் பிரச்சினைக்குள் போகவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இதில் என்ன பிரச்சினை என்றால், தற்போது மணி 11-10 ஆகப் போகிறது. பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, ஒரு கவன ஈர்ப்பு